சார்பு நீதிமன்றம், இலால்குடி.
நாள்.25.06.2026.
SC.NO.204/2019
PW10 : Lw13 – அம்சவேணி (வயது 49 ) க/பெ.வெற்றிவேல்
(2,4,5, 6 எதிரிகள் மட்டும் இன்று நீதிமன்றத்தில் ஆஜர், 1,3 எதிரிகள் ஆஜர் இல்லை )
(சாட்சிக்கு சத்திய பிரமாண வாக்குமூலம் வாய்மொழியாக செய்விக்கப்பட்டது)

முதல் விசாரணை

நான் தற்போது கரூர் மாவட்டம், மாயனூர் காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணி புரிந்து வருகிறேன். 2017 ஆம் வருடம் திருவெறும்பூர்மதுவிலக்கு அமலாக்க பிரிவில் காவல் ஆய்வாளராக பணியில் இருந்த விவரம் எனக்கு தெரியும். அவர் விடுமுறையில் இருந்த சமயத்தில் நான் பொறுப்பு காவல் ஆய்வாளராக அப்பிரிவில் பணியில் இருந்தேன். அதனால் எனக்கு மேற்படி காவல் ஆய்வாளரின் கையெழுத்து மற்றும் அவர் மேற்கொண்ட நடவடிக்கைகள் பற்றி எனக்கு தெரியும். அவர் தற்சமயம் இறந்துவிட்டார். இந்த திருவெறும்பூர் மதுவிலக்கு அமலாக்க பிரிவு காவல் நிலைய குற்ற எண். 710/2017 சட்ட பிரிவு 4(1)(A), 4(1) (aaa) TNP Act ன் படி கடந்த 06.09.2017 ஆம தேதி உதவி ஆய்வாளர் செல்வராஜ் என்பவர் கொடுத்த தகவலின்பேரில் காவல் ஆய்வாளர் அதிவீரராமபாண்டியன், சம்பவ இடமான கொணலைக்கு சென்று அங்கு அவர் பிடித்து வைத்திருந்த அண்ணாதுரை, தர்மலிங்கம் மற்றும் மணிகண்டன் ஆகியோரை கைது செய்தும், அவர்களிடமிருந்து சரக்கு ஏற்றி, இறக்க பயன்படுத்தப்பட்ட ஈச்சர் லாரி TN 27 U 1113 என்ற வாகனத்தையும் TN 48 S 1764 என்ற எண் கொண்ட மாருதி ஆம்னிவேனையும் மகஜரில் கைப்பற்றியும் அந்த மேற்படி வாகனங்களில் ஏற்றப்பட்ட ACE AAA 750 ML பிடிக்கக்கூடிய 12 பாட்டில்கள் கொண்ட 400 அட்டைபெட்டிகளையும் மற்றும் அதே ஈச்சர் வண்டியிலிருந்து Black Grapes என்று லேபிள் ஒட்டப்பட்ட 10 அட்டை பெட்டிகளையும், அதே அளவு கொண்ட Black Grapes என்ற லேபிள் ஒட்டட்பபட்ட 50 அட்டை பெட்டிகளையும் கைப்பற்றுதல் மகஜர் தயார் செய்து கைப்பற்றியும் மேற்படி 3 எதிரிகளிடமும் தனிதனியாக சாட்சிகள் முன்னிலையில் ஒப்புதல் வாக்குமூலம் பெற்றும், எதிரிகளையும் வாகனத்தையும் வழக்கு சொத்துக்களையும் நிலையம் கொண்டு வந்து எதிரிகளை நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்தார். மேற்கண்ட மகஜர் சான்று ஆவணங்கள் ஏற்கனவே அ.சா.ஆ.18 முதல் அ.சா.ஆ.20 ஆகவும் மற்றும் வழக்கு சொத்துக்களின் புகைப்பட நகல்கள் அ.சா.ஆ.11 முதல் அ.சா.ஆ 13 ஆக குறியீடு

செய்யப்பட்டுள்ளது. ஈச்சர் வாகன எண்.TN 27 U 1113 1937 ஆம் வருட தமிழ்நாடு மதுவிலக்கு சட்ட பிரிவு 14(4)ன் படி அரசுடைமை ஆக்கப்பட்டு, அதனை மாவட்ட காவல் அலுவலர் மூலமாக 16.05.2018 ஆம் தேதி பொது ஏலம் விடப்பட்டு ரூ.13,500/- சேவை வரி உட்பட 88,500/-க்கு விடப்பட்டு அரசு கணக்கில் சேர்க்கப்பட்டது. அதற்கான ரசீது **அ.சா.ஆ.22** ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி காவல் ஆய்வாளர் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜரும் வரைபடமும் தயார் செய்தார். பார்வை மகஜர் ஏற்கனவே அ.சா.ஆ.14 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. அந்த வரைபடம் **அ.சா.ஆ.23** ஆக குறியீடு செய்யப்படுகிறது. எதிரிகளிடமிருந்து கைப்பற்றப்பட்ட 400 மற்றும் 12 அளவுள்ள அட்டை பெட்டிகளும் மற்றும் 10 அட்டை பெட்டிகளையும் படிவம் 95 மூலம் காவல் ஆய்வாளர் அதிவீரராமபாண்டியன் 12.09.2017 ஆம் தேதி வழக்கு சொத்தாக அனுப்பி வைத்தார். அது **அ.சா.ஆ.24** ஆக குறியீடு செய்யப்படுகிறது. மற்றும் படிவம் 95 மூலம் 750 ML அளவு கொண்ட 12 பாட்டில்கள் கொண்ட 50 அட்டை பெட்டிகளை அதே தேதியில் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தார். அதற்கான படிவம் 95 **அ.சா.ஆ.25** ஆக குறியீடு செய்யப்படுகிறது. வழக்கில் கைப்பற்றப்பட்ட ஆம்னி கார் TN 48 S 1764 படிவம் 95 மூலம் 06.09.2017 ஆம தேதி நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தார். அதற்கான படிவம் 95 **அ.சா.ஆ.26** ஆக குறியீடு செய்யப்படுகிறது. காவல் ஆய்வாளர் கைப்பற்றுதல் மகஜர் தயார் செய்து கைப்பற்றிய ஈச்சர் லாரி, 4800 எண்ணிக்கை கொண்ட 400 அட்டை பெட்டிகள் 120 பாட்டில்கள் எண்ணிக்கை கொண்ட 12 அட்டை பெட்டிகள் அடங்கிய கைப்பற்றுதல் மகஜர் என்னிடம் காட்டப்படுவது தான் அது **அ.சா.ஆ.27** ஆக குறியீடு செய்யப்படுகிறது. வழக்கு சொத்தான காரினை கைப்பற்றிய கைப்பற்றுதல் மகஜர் என்னிடம் காட்டப்படுவது தான். அது **அ.சா.ஆ.28** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 600 எண்ணிக்கை கொண்ட பாட்டில்கள் அடங்கிய 50 அட்டை பெட்டிகளை கைப்பற்றுதல் மகஜரில் கைப்பற்றிய மகஜர் என்னிடம் காட்டப்படுவது தான் அது **அ.சா.ஆ.29** ஆக குறியீடு செய்யப்படுகிறது. வழக்கு சொத்து கைப்பற்றப்பட்ட மதுவினை பகுப்பாய்விற்கு அனுப்பி அதன்அறிக்கையை 28.09.2017 ஆம் தேதி காவல் ஆய்வாளர் பெற்றுள்ளார். அந்த அறிக்கை **அ.சா.ஆ.30** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்னிட்டு சாட்சிகளிடம் பட்டியல் சாட்சிகளிடம் வாக்குமூலம் பெற்று பதிவு செய்தார். கைப்பற்றப்பட்ட ஈச்சர் வண்டி, ஆம்னிவேன், படிவம் 95 ன் மூலம்

நீதிமன்றத்திற்கு காவல் ஆய்வாளர் அனுப்பி வைத்தார். அதேபோல் கைப்பற்றப்பட்ட சரக்கு அட்டைபெட்டிகளை படிவம் 95ன் மூலம் நீதிமன்றத்திற்கு காவல் ஆய்வாளர் அனுப்பி வைத்தார். நான் 07.09.2017 ஆம் தேதி பொறுப்பு காவல் ஆய்வாளராக பதவி ஏற்றுக்கொண்ட பிறகு இவ்வழக்கின் எதிரி சிவகுமார், குமார் ஆகியோரை மண்ணச்சநல்லூர் பஸ் ஸ்டாப் அருகில் வைத்து 15.00 மணி அளவில் உரிய காரணம் கூறி கைது செய்து ஒப்புதல் வாக்குமூலம் சாட்சிகள் முதல் நிலை காவலர் எண் 108 ஜெயகுமார் மற்றும் காவலர் 1015 முத்துகிருஷ்ணன் ஆகியோர் முன்னிலையில் வாக்குமூலம் பெற்று அவர்களிடம் சாட்சிகளாக கையொப்பம் பெறப்பட்டது. சிவகுமாரிடம் பெறப்பட்ட ஒப்புதல் வாக்குமூலம் **அ.சா.ஆ.31** ஆக குறியீடு செய்யப்படுகிறது. குமாரிடம் பெறப்பட்ட ஒப்புதல் வாக்குமூலம் என்னிடம் காட்டப்படுவது தான் அது **அ.சா.ஆ.32** ஆக குறியீடு செய்யப்படுகிறது. எதிரி சிவகுமார் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின்படி அவரிடமிருந்து சாம்சங் செல்போனை கைப்பற்றுதல் மகஜர் தயார் செய்து கைப்பற்றினேன் அது **அ.சா.ஆ.33** ஆக குறியீடு செய்யப்படுகிறது. எதிரி குமாரிடம் பெறப்பட்ட ஒப்புதல் வாக்குமூலத்தின் படி கைப்பற்றிய சாம்சங் டியோஸ் மொபைல் போன் கைப்பற்றுதல் மகஜர் தயார் செய்து கைப்பற்றினே் அது என்னிடம் காட்டப்படுவது தான். அது **அ.சா.ஆ.34** ஆக குறியீடு செய்யப்படுகிறது. எதிரிகளை கைது செய்து நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்தேன். என்னிடம் காட்டப்படும புகைப்படம் தான் எதிரிகளிடம் நான் கைப்பற்றிய செல்போனின் புகைப்படம் **அ.சா.ஆ.35** ஆக குறியீடு செய்யப்படுகிறது. மீண்டும் காவல் ஆய்வாளர் அதிவீரராம பாண்டியன் பணிக்கு திரும்பியதால் அவரிடம் வழக்கு கோப்பினை ஒப்படைத்தேன். அவர் மீண்டும் இவ்வழக்கினை மேல் விசாரணை செய்து சம்மந்தமப்பட்ட சாட்சிகளை விசாரணை செய்தும், வாக்குமூலம் பதிவு செய்தும் பகுப்பாய்வு அறிக்கையை பெற்றும் எதிரிகள் மீது 25.10.2017 ஆம் தேதி சட்ட பிரிவுகள் 4(1) (aaa), 4(1) (A) TNP Act மற்றும் 5 & 6 TNRS Rule 2000 படி இறுதி அறிக்கையை நீதிமன்றத்தில் தாக்கல் செய்தார்.

<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>

கைது செய்ததாக கூறும் ஆஜர் எதிரிகளை இந்த வழக்கிற்கு முன்பு நான் பார்த்ததில்லை என்றால் சரிதான். ஆய்வாளர் அதிவீரராமபாண்டியன் கைது செய்த

எதிரிகளின் ஒப்புதல் வாக்குமூலங்களிலும், கைப்பற்றுதல் மகஜரிலும் குற்ற எண், சட்ட பிரிவு குறிப்பிட்டு எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஆனால் முதல் தகவல் அறிக்கையை அதற்கு பின்னிட்டு தான் பதிவு செய்தோம் என்றால் சரிதான். ஆய்வு செய்த போலிசார் ஆய்வு செய்த நேரம் மற்றும் இடம் குறித்து முன்னுக்கு பின் முரணாக அவரது விசாரணையில் சாட்சியம் அளித்துள்ளார்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நான் எந்த நாளில் எத்தனை மணிக்கு இந்த வழக்கில் பொறுப்பேற்று கொண்டேன் என்று எதாவது ஆவணத்தில் குறிப்பிட்டு கூறியுள்ளேன் என்றால் வழக்கு நாட்குறிப்பேட்டில் அது பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது. அது நீதிமன்றத்திற்கு அனுப்பப்படமாட்டாது.

நான் எந்த விசாரணையையும் நேரடியாக செய்யவில்லை என்றும், பின்னிட்டு அறிக்கையை தாக்கல் செய்து எதிரிகள் மீது வழக்கு பதிவு செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் சொன்ன நேரத்தில், சொன்ன இடத்தில் வழக்கு சம்பவம் நடைபெறவில்லை மற்றும் எதிரிகளை கைது செய்யவில்லை என்றால் சரியல்ல. இந்த வழக்கிற்கும் எதிரிகளுக்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

**ம.வி** - இல்லை.

/signed/
அம்சவேணி

சாட்சி சொல்ல சொல்ல திறந்த நீதிமன்றத்தில் என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்பு சாட்சி சரி என ஒப்புக்கொண்டு என் முன்பு கையெழுத்திட்டார

R.MOHANA Digitally signed by R.MOHANA Date: 2026.06.25 18:38:32 +0530

சார்பு நீதிபதி
இலால்குடி